30 ஜூன் 2024
பொதுக்காலம் ஆண்டின் 13 ஆம் ஞாயிறு

NEW WAY OF BEING CHURCH

newbec

## மண்ணுலகிற்கு உப்பும் உலகிற்கு ஒளியும்:

ஆன்மீக ஒன்றிப்பில் பங்குகொள்ளும் உணர்வோடு தூதுரைத்தல், கொண்டாடுதல் மற்றும் செவிமடுத்தல் (மத்தேயு 5: 13-16)

மாதாந்திர கருப்பொருள்
திருஅவையாக நம் குழந்தைகளை வளரவிடுங்கள்

# அவருடைய நேரத்தில்

வாழ்வோரின் இறப்பில் கடவுள் மகிழ்வதில்லை என்ற உண்மையை இன்றைய வாசகங்கள் நம்முன் வைக்கிறது. ஏனென்றால் உண்மை அழியாதது. ஆனால் அலகையின் பொறாமையினால் சாவு உலகில் நுழைந்தது. நன்மைக்கும் தீமைக்கும் இடையே, விண்ணகம் மற்றும் நரகத்தில் வலிமைகளுக்கு இடையே எப்போதும் ஒரு நிலையான போர் உள்ளது. உடலுக்கும் இரத்தத்திற்கும் எதிராக அல்ல; மாறாக ஆட்சியாளர்களுக்கும் அதிகாரங்களுக்கும், இருளின் ஆட்சியாளர்கள், தீய சக்திகள் இவற்றுக்கு எதிராக மல்யுத்தம் செய்துகொண்டே இருக்கிறோம். இருப்பினும் பாவம் மற்றும் மரணத்தின்மீது கடவுளுக்கு அதிகாரம் உள்ளது.



அவர் ஒருவரே இறைவன் மேலும் இன்று நாம் காணும் அனைத்து அக்கிரமங்கள், கொடுமை மற்றும் நிந்தை அவதூறுகள் அனைத்தின்மீதும் அவருக்கு அதிகாரம் உண்டு. அவற்றுக்கு நாமே சாட்சிகள். இந்த விபரீதமான உலகில், வாழ்விலும் சாவிலும் நமக்கு நிச்சயமாக இறைவன் தேவை.

இயேசு ஒரு இளம்பெண்ணை சாவிலிருந்து உயிர்ப்பித்து மீண்டும் வாழ்வு கொடுத்த வலிமை வாய்ந்த ஒரு நிகழ்ச்சியை இன்றைய நற்செய்தி நமக்கு வழங்குகிறது. யாயிரின் வீட்டுக்கு இயேசு தாமதமாக செல்கிறார். அவர் மிகுந்த நேரத்தை எடுத்துக்கொள்கிறார் என்பதைப் போன்ற தோற்றம் அவரைப் பின் தொடர்ந்த மக்கள் கூட்டத்தினரிடையே காணப்படுகிறது. ஆனால் இயேசு எப்போதும் சரியான நேரத்தில் இருப்பார் என்று நாம் முடிவு செய்து கொள்ளலாம். ஒரு தொடுதலுடன், ஒரு கட்டளையுடன் இயேசு அந்தப் பெண்ணை எழுந்திருக்குமாறு சொல்கிறார். அந்தப் பெண் விழித்தெழுந்தது மட்டுமல்ல இன்னும் கூடுதலாக நடக்கவும் தொடங்கினார். அங்கிருந்த அனைவரையும் வியப்பில் ஆழ்த்திட இயேசு இவ்வாறு செய்கிறார். நம்முடைய எல்லாச் சூழ்நிலைகளிலும் பொறுமையாக இருக்க, இயேசுவுக்கு நேரம் கொடுக்க, இங்கு நமக்கு நினைவூட்டப்படுகிறது. சில சமயங்களில் அவர் வேலை செய்வதை நம்மால் காணமுடியாவிட்டாலும் அவருடைய வேலையில் அவர் இருக்கிறார்.

மேலும் இரத்தப்போக்கினால் பாதிக்கப்பட்டிருந்த ஒரு பெண்ணையும் இயேசு குணப்படுத்துகிறார். மருத்துவர் பலரிடம் தமக்குரியதையெல்லாம் செலவழித்தும் அவர் குணமாகவில்லை. ஆண்டவருடைய ஆடையைத் தொட்டால் கூட போதும், நான் குணமாவேன் என்ற அவரின் நம்பிக்கை அவரின் வல்லமையை அனுபவிக்கப் போதுமானதாக இருந்தது. இன்றைய நற்செய்தியில் உள்ள இரண்டு நிகழ்வுகளும் நம்பிக்கை உள்ளவர்களுக்கு இயேசுவின் வல்லமை எடுத்துரைக்கப்படுகிறது. இயேசு தம் மகளைக் குணப்படுத்தி உயிரளிப்பார் என்று யாயிரும், இயேசுவின் மேலாடையைத் தொட்டால் கூட குணம் பெறமுடியும் என்று இரத்தக் கசிவுள்ள பெண்ணும் நம்பிக்கைக் கொண்டனர். இதுபோன்ற நிகழ்வுகள் ஆண்டவர் நமக்கு உதவவிரும்புகிறார் என்பதில் நம்பிக்கைக் கொள்ள நமக்கு உதவுகின்றன. எந்தச் சூழ்நிலையிலும் ஒவ்வொரு நாளும், எல்லா வகையிலும் "உன் நம்பிக்கை உன்னைக் குணமாக்கிற்று" என்றும் "அஞ்சாதீர், நம்பிக்கையை மட்டும் விடாதீர்" என்னும் வார்த்தைகளையும் இயேசு நம்மிடமும் கூறுகிறார் என்று நம்பிக்கைக் கொண்டு நம்மை முழுவதுமாக இயேசுவுக்கு அர்ப்பணிப்போம்.

குழந்தைகளை முதலில் அன்பு செய்யுங்கள்; அதன் பின் கற்றுக்கொடுங்கள்.
– புனித அன்னை தியோடர் கெரின்







**இன்றைய இறைவார்த்தை:**

ஞானநூல்: 1: 13-15, 2: 23-24

திபா: 30: 2, 4-6, 11-13

2 கொரி: 8:7,9, 13-15

மாற்: 5: 21-43(1) 5: 21-24, 35-43

INTERNAL CIRCULATION ONLY
BUL 25/2024

**Published by:** Archdiocesan Pastoral Institute (API) | **Email:** api@archkl.org